[1971 டிசம்பர் 15

அரிசன குடியிருப்புகளுக்கு வானெலிப் பெட்டிகள்

***411 வினு.—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) அரிசன சேரிகளில் மிகவும் சுத்தமாக உள்ள கிராமங் களுக்கு 1967-லிருந்து 1970-வரை ஒவ்வொரு ஆண்டும் எத்தனை வானெலிப் பெட்டிகள் இனுமாக கொடுக்கப்பட்டுள்ளன ?

(இ) அதில் எந்த மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) 1967-68-லிருந்து 1970-71-வரை மாவட்டங்களிலுள்ள சுத்தமாக பராமரிக் கப்படும் அரிசன காலனிகளுக்கு வழங்கப்பட்ட வானெலிப் பெட்டிகளின் விபரங்கள் அடங்கிய அட்டவணை * இப்பேரவையில் தனியாக வைக்கப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டத்தின்கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்ற எல்லா மாவட்டங்களையும் விட அதிக வானெலிப் பெட்டிகள் பெற்றுள்ளது.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்பொழுது திருச்சிமாவட்டத்தில்தான் அதிகமாக வானெலிப் பெட்டிகள் கொடுக்கப்பட்டதாகவும் அங்குள்ள சேரிகள் நல்லமுறையிலே இருப்பதால் கொடுக்கப்பட்டதாகவும் சொன்னர்கள். பரிசு வழங்கும் திட்டத்தை மற்ற மாவட்டங் களுக்கும் விரிவுபடுத்தி சேரிகள் துப்புரவாக வைத்துக்கொள்கின்ற முறையிலே ஒரு குழுவை அமைச்சர் அவர்கள் மூலமாக அமைத்துச் செயல்படுத்தவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அதை அரசாங்கம் நிறைவேற்றுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாவட்ட வாரியாக யார் யாருக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது என்ற விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டு இருக்கிறது. எல்லா மாவட்டங் களுக்கும்தான் சலுகை, பரிசுகள் தரப்படுகின்றன. சுத்தமாக வைத்துக்கொள்ளப்படுகின்ற காலனிகளுக்கு இப்படிப்பட்ட பரிசுகள் தரப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடத்தில் அந்தப் பணியை ஏற்றுச் செய்து சுத்தமாக நல்ல முறையிலே வைத்துக்கொண்டால் அவர்களுடைய இடங்களுக்கும் பரிசுகள் கிடைக்கும்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, சுத்தமாக வைத்துக் கொள்ளப்படுகின்ற காலனிகளுக்கு வானெலிப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. சுத்தமாக இருக்கின்றனவா என்று பார்வையிடுவதற்கு அங்கங்கே உள்ள அதிகாரிகள்தான் செல்கின்றுர்களா? அந்தந்தப் பகுதிகளிலுள்ள சட்ட மன்ற உறுப்பினர்களும் சென்று பார்வையிட்டால்தான் எந்த எந்தக் காலனிகள் சுத்தமாக இருக்கின்றன என்று பார்வையிட்டு

* 106-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

1971 டிசம்பர் 15]

வானெலிப் பெட்டிகள் வழங்க ஏதுவாக இருக்கும். எனவே, சட்ட மன்ற உறுப்பினர்களும் அந்தப் பணியிலே ஈடுபட வாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்துமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாவட்டத்திலே இருக்கின்ற அரிசன நலக்குழு சுத்தமான காலனிகளைத் தெரிந்தெடுக்கின்றார்கள். அதிலே சட்டமன்ற உறுப்பினர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். எனவே, தனியாகச் சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெறவேண்டிய நிலைமை இப்பொழுது இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையிலே கோவையிலே மட்டும் 1967-68-லேயும் 9 தான், 1968-69-லேயும் 9 தான், 1969-70-லேயும் 9 தான், 1970-71-லேயும் 9 தான் என்று கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் வட ஆற்காடு, திருச்சி, மதுரை, தஞ்சாவூர் மாவட்டங்களைப் பார்த்தால், 12,13 என்ற அளவுக்கு இருக்கின்றன. இவை எந்த அடிப்படையிலே கொடுக்கப்படுகின்றன? கோவை மாவட்டத்திலே உள்ள அரிசனச் சேரிகளுக்கு இன்னும் அதிகமான அளவுக்கு வானெலிப் பெட்டிகள் தேவைப்படுகின்றன. எனவே, அரசாங்கம் அவற்றைக் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள அனைத்துக் காலனிகளுக்கும் கொடுப்பதல்ல இது. அங்கங்கு உள்ள தெருக்கள் சுத்தமாக வைக்கப்பட்டிருந்தால், குழந்தைகள் நல்லமுறையிலே சுத்தமாக பராமரிக்கப்படுகிறார்கள் என்றால், வீடுகள் எல்லாம் சுத்தமாக வைக்கப்பட்டு இருந்தால் அவைகளைப் பார்த்து, மாவட்ட நலக்குழு பார்வையிட்டு எந்த இடங்கள் சுத்தமாக இருக்கின்றன என்று பார்த்துத் தெரிந்தெடுக்கின்றார்கள். அப்படிச் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கின்ற இடங்களுக்குத்தான் அப்படிப்பட்ட பரிசுகள் வழங்கப்படுகின்றனவே தவிர, எல்லா இடங்களுக்கும் பரிசு என்பதில்லை. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சற்று அக்கறை காட்டி சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்வார்களானால் நிறைய வானெலிப் பெட்டிகள் கொடுக்கப்படும்.

திரு. என். இராஜாங்கம் : கொடுக்கப்படுகின்ற வானெலிப் பெட்டிகளுக்கான செலவினங்களை அந்தந்தப் பஞ்சாயத்துக்களே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நல இலாகா கேட்டு இருக்கிறதா ? அல்லது நல இலாகாவே செலவினங்களை ஏற்றுக்கொள்கிறதா ? சில பஞ்சாயத்துக்களிலே பணம் இல்லை என்ற காரணத்தினால் கொடுக்கின்ற வானெலிப் பெட்டிகள் சரியாகச் செயல்படவில்லை என்பதை அரசாங்கம் உணருகிறதா ? அவைகள் நல்லபடி செயல்படுவதற்கு அரசாங்கத்தால் என்ன திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வானெலிப் பெட்டிகள் எல்லாம் நல இலாகா மூலமாகத்தான் வழங்கப்படுகின்றன. சில அரிசனக் காலனிகளுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் நிதிவசதி இருந்தால் அவர்களாகவே தருகிறார்கள். சுத்தமாக

வைக்கப்பட்டிருக்கின்ற காலனிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற வானொலிப்பெட்டிகளின் முழுச் செலவையும் நலத்துறை ஏற்றுக் கொள்கிறது. அந்தப் பெட்டியின் விலை 300 ரூபாய். அது இப்பொழுது உயர்த்தப்படவேண்டுமா என்பது பரிசீலனைக் குள்ளாகியிருக்கிறது.

திரு. இ. பொன்னுமலை : தலைவரவர்களே, இப்படிப்பட்ட வானொலிப் பெட்டிகள் தருவதை சில பஞ்சாயத்துக்களிலே தலைவர்கள் தங்களுடைய வீடுகளிலே வைத்துவிடுகிறார்கள். ஆகவே, வானொலிப்பெட்டி தரும்பொழுது அந்த வானொலிப் பெட்டியை வைக்க ஒரு கட்டடத்தையும் கட்டித் தருவதற்கு இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கட்டடத்தையும் சேர்த்துத்தான் செலவு என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படி பஞ்சாயத்துத் தலைவர்கள் வீட்டில் வைத்துக்கொள்கிறார்கள் என்ற புகார் அரசாங்கத்திற்கு வந்தால் அவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, திருச்சிராப் பள்ளி ஜில்லாவில் எந்தெந்த காலனிகளில் இப்படிப்பட்ட ரேடியோ செட்டுகள் கொடுக்கப்பட்டது என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தனிக்கேள்வி போடவும்.

***412 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

திருப்பூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் அரிசனங்கள் வாழும் இடங்களில் எங்கெங்கு "வானொலிப்பெட்டிகள்" வழங்கப்பட் டுள்ளன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :

(1) ஆண்டிப்பாளையம்.
(2) கே. ஆண்டிப்பாளையம்.
(3) கரிப்பாளையம்.
(4) நம்பியார்புரம்.
(5) நல்லத்துப்பாளையம்.
(6) நல்லூர்.

Creche at Secretariat

* 413 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether there is any proposal to provide a creche at Secretariat to help the working mothers; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) இல்லை.